# நடப்பு நிகழ்வுகள்- மார்ச் 21 - 2018

❖ சர்வதேச காடுகள் தினம் - மார்ச் 21.

❖ ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகள் அவையால் "உலக கவிதை தினம்" (World Poetry Day) மார்ச் 21 அன்று உலக முழுவதிலும் கவிதைகள் வாசித்தல், எழுதுதல், வெளியீடு மற்றும் கற்பித்தல் ஆகியவற்றை ஊக்குவிக்க கடைபிடிக்கப்படுகிறது.

❖ உலக குறை நோய்க்குறி தினம் (World Down Syndrome Day) மார்ச் - 21. 2018 உலக குறை நோய்க்குறி தின கருப்பொருள்: "நான் எனது சமூகத்திற்கு என்ன கொண்டுவருகிறேன்" (2018 Theme: What I Bring To My Community) என்பதாகும்.

❖ ஆண்டுதோறும் **பிரெஞ்ச் மொழி தினம்** மார்ச் 20 அன்று ஐக்கிய நாடுகள் அவையால் அனுசரிக்கப்படுகிறது

❖ சிட்டுக்குருவிகளைப் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 20 அன்று **"உலக சிட்டுக்குருவி தினம்"** (World Sparrow Day) 2010 முதல் அனுசரிக்கப்படுகிறது.

❖ உலகளாவிய அளவில் சர்வதேச மகிழ்ச்சி தினம் (International Day of Happiness) ஆண்டுதோறும் மார்ச் 20 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

❖ சர்வதேச கதை சொல்லல் தினம் (World Day of Story Telling)- மார்ச் 20

❖ போர் நினைவுச் சின்னம் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதி (War Memorial Boys and Girls Hostel) டேராடூனில் தண்டா லகாண்ட் கிராமத்தில் உத்தரகண்ட் மாநில அரசினால் துவங்கப்பட்டுள்ளது.

❖ சென்னையைச் சேர்ந்த விலங்குகள் நல ஆர்வலர் ஷிராணி பெரேராவுக்கு பகவான் மகாவீர் அறக்கட்டளையின் சார்பில் 21-வது அனைத்திந்திய மகாவீர் விருது வழங்கப்பட்டுள்ளது.

OXFORD IAS ACADEMY

- புது தில்லி - டெல் அவிவ் ( இஸ்ரேல்) நேரடி விமான சேவையை ஏர் இந்தியா நிறுவனம் மார்ச் 22 முதல் துவங்குகிறது. 256 இருக்கைகளைக் கொண்ட போயிங் 787-800 ரக விமானங்கள் இந்தச் சேவைக்கு பயன்படுத்தப்படவிருக்கிறது.

- **உலக வர்த்தக அமைப்பின் மாநாடு 19-20 மார்ச் 2018 தேதிகளில் புது தில்லியில் நடைபெற்றது.** இரண்டு நாட்கள் நடக்கும் இந்த மாநாட்டில் உலக வர்த்தக அமைப்பின் தலைவர் ராபெர்டோ அஸீவேடோ, இந்திய வர்த்தக துறை அமைச்சர் சுரேஷ் பிரபு, நேபாளம், வங்காளதேசம் உள்ளிட்ட 7 நாடுகளின் வர்த்தக மந்திரிகள் பங்கேற்றனர். ஆப்ரிக்க நாடுகள் உள்பட 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

- ஊட்டச்சத்து குறைபாட்டைத் தீர்ப்பது (POSHAN Abhiyaan) குறித்த தேசிய அளவிலான பயிலரங்கத்தை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் புது டெல்லி பிரவாசி பாரதீய கேந்திரத்தில் நடந்தது. இதில் அனைத்து மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் பங்கேற்றன.

- மூத்த பத்திரிக்கையாளரான சுனில் சர்மா(49) மார்ச் 19 அன்று சிம்லாவில் காலமானார். இவர் “திவ்ய ஹிமாச்சல்” தினசரியில் பணிபுரிந்து வந்தார்.

- பேரிடர் அபாயக் குறைப்பு பற்றிய முதலாவது இந்திய-ஜப்பான் பயிலரங்கை புதுடில்லியில் நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் Dr. ராஜுவ்குமார் மார்ச் 19 அன்று தொடங்கிவைத்தார். 2 நாட்கள் நடைபெறும் பேரிடர் மேலாண்மை ஆணையமும் (NDMA) ஜப்பான் அரசும் கூட்டாக ஏற்பாடு செய்துள்ளது.

- உலகின் கடைசி ஆண் காண்டாமிருகமான “சூடான்” கென்ய நாட்டில் இறந்ததைத் தொடர்ந்து உலகில் இரண்டு வெள்ளை காண்டா மிருகங்கள் மட்டுமே எஞ்சியுள்ளது.

OXFORD IAS ACADEMY